No.C.07/2026 16.03.2026

# தொழிலாளர் நாள் - மே 01, 2026

## ஆயரின் சுற்றுமடல்

அன்பிற்கினிய சகோதரிகளே சகோதரர்களே,

உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் அமைதியும் அன்பும் உங்கள் அனைவரோடும் தங்குவதாக!

அன்றாடக் கூலித் தொழிலாளர்கள், படித்து பல்வேறு அலுவல்களில் இருப்பவர்கள், சொந்தமாகத் தொழில் வைத்திருப்பவர்கள் என பல தரப்பினர் நம் மத்தியில் உண்டு. உங்கள் குடும்பத்தின் முன்னேற்றத்திற்காகவும் சமூக வளர்ச்சிக்காகவும் நீங்கள் செய்துவரும் தியாகத்தையும் உங்கள் அயராத உழைப்பையும் நான் உளமகிழ்ந்து பாராட்டுகின்றேன்.

உழைப்பின் மேன்மையை நினைவுகூரும் மே 1ஆம் நாளை ஒவ்வோர் ஆண்டும் தொழிலாளர் நாளாக நாம் பெருமையுடன் கொண்டாடுகிறோம். நம் ஆண்டவர் இயேசு அன்றாட வாழ்வில் ஒரு தச்சுத் தொழிலாளி. அவர் தச்சுத் தொழிலை ஆர்வமுடன் செய்து மனித உழைப்பின் தேவையையும் மேன்மையையும் உலகிற்கு உணர்த்தினார்.

### இன்றையத் தொழிலாளர் நிலை:

தொழிலாளர்கள் இன்று உலகமெங்கும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறார்கள். வேலைவாய்ப்பு இன்மை, குறைந்த சம்பளம், வேலை நிரந்தரமின்மை, பாதுகாப்பற்ற பணிச்சூழல், பணியிடங்களில் பாலியல் சுரண்டல், அதிக நேர வேலை, மாண்புடன் நடத்தப்படாமை, புலம் பெயர்தல் போன்ற கடுமையானச் சூழல்கள் தொழிலாளர்களின் வாழ்வை அழுத்துகின்றன.

முதலாளிகள் வர்க்கத்திற்கு சார்பாகக் கொண்டுவரப்படும் சட்டங்கள் தொழிலாளரின் சுமையை மேலும் அதிகரிக்கின்றன. கடந்த ஆண்டு 2025 நவம்பர் 21ஆம் நாள் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட நான்கு புதிய தொழிலாளர் சட்டங்கள் 8 மணி

நேர வேலையை 12 மணி நேரமாக அதிகரிக்கவும், தொழிற்சங்க உரிமைகளைக் குறைக்கவும், தொழிலாளர்கள் ஒன்றிணைந்து போராடும் உரிமையைக் கட்டுப்படுத்தவும், எளிதில் பணிநீக்கம் செய்யப்படவும் வழிவகைச் செய்து கூடுதல் நெருக்கடிகளை தொழிலாளர் வர்க்கத்தின்மேல் சுமத்துவதாக உணரப்படுகின்றன.

“உங்கள் வயலில் அறுவடை செய்த வேலையாள்களுக்குரிய கூலியைப் பிடித்துக் கொண்டீர்கள். அவர்களின் கூக்குரல் படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது” (யாக் 5:4) என யாக்கோபு திருமுகம் தொழிலாளர்களுக்கு எதிரானப் போக்குகளைக் குறித்து நம்மை எச்சரிக்கிறது.

## எழுச்சி – ஒற்றுமையின் தேவை:

உரிமைகள் அனைத்தும் போராடிப் பெறப்பட்டவையே. அவற்றை எளிதில் தொலைத்துவிடக் கூடாது. ஒற்றுமைதான் தொழிலாளர்களின் ஒரே மூலதனம்! விழிப்புணர்வுதான் தொழிலாளர்களின் பாதுகாப்பு! இயக்கமாக்கப்படுதல்தான் வெற்றிக்கானப் பாதை! எனவே, தொழிலாளர்களின் உரிமையை முதன்மையாக நம் வீட்டிலும், நமக்குச் சொந்தமான நிறுவனங்களிலும், நமது நாட்டிலும் பேணிக்காக்க மே தினத்தில் நாம் உறுதியேற்போம்!

- வேலையாள்களுக்கு நியாமான கூலி வழங்கப்படுவதையும், அது காலந்தாழ்த்தப்படாமல் வழங்கப்படுவதையும் நாம் உறுதிசெய்ய வேண்டும்.
- பெண்கள், ஒப்பந்தப் பணியாளர்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோரின் பாதுகாப்பை கிறித்தவர்கள் தங்களுக்குச் சொந்தமான நிறுவனங்களில் உறுதிசெய்ய வேண்டும்.
- தொழிலாளர்களின் உரிமைகளுக்காக இணைந்து குரல்கொடுக்க தொழிற்சங்கங்களையும் தொழிலாளர் இயக்கத்தையும் பங்கு மக்களிடையே வலுப்படுத்த வேண்டும்.
- வெளியூரிலும் வெளிநாடுகளிலும் பணிசெய்யும் தொழிலாளர்கள் குறித்த விபரங்களை பங்களவில் சேகரித்து, அவர்களின் அருள்வாழ்வுக்கானத் தேவைகளையும் இக்கட்டானக் காலகட்டங்களில் அவர்களுக்கு வழிகாட்டவும் பங்கு நிர்வாகம் துணைநிற்க வேண்டும்.

- கூலித்தொழில் செய்து பல ஆண்டுகள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றியத் எளிய தொழிலாளர்களை பங்குத் திருவிழாக்களின்போது கௌரவித்து நல உதவிகளை வழங்க வேண்டும்.
- தொழிலாளர் நல சிறப்பு நிதியை பங்குகளில் உருவாக்கி வயது முதிர்ந்த தொழிலாளர்கள், நோயுற்ற தொழிலாளர்கள், விபத்துக்குள்ளானத் தொழிலாளர்கள் ஆகியோருக்கான பங்கு ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த வேண்டும்.
- இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.
- குடும்பப் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் விதத்தில் பெண்களும் வேலைக்குச் செல்வதை குடும்பங்களில் ஊக்குவிக்க வேண்டும்.
- தொழிலாளர்களின் உழைப்பின் பயனை விரயமாக்கும் போதைப் பழக்கத்திலிருந்து குடிநோயாளிகள் விடுபட சிறப்பு முயற்சிகளை அன்பியங்கள் வாரியாக முன்னெடுக்க வேண்டும்.
- அரசு வழங்கும் சலுகைகள் தகுதியுள்ளத் தொழிலாளர்கள் அனைவரையும் சென்றடைகிறதா என்பதைக் கண்காணித்து பங்களவில் வழிகாட்ட வேண்டும்.
- தொழிலாளர் நலப்பணிகளை ஒருங்கிணைக்க தொழிலாளர் இயக்கம் இதுவரை இல்லாத பங்குகளில் இவ்வமைப்பை உருவாக்க வேண்டும்.

இப்பணிகளை முன்னெடுப்பதில் தொழிலாளர்களின் பாதுகாவலராம் புனித யோசேப்பின் அருள்துணையும், அன்னை மரியாவின் பரிந்துரையும் நமக்கு ஆற்றல் அளிப்பனவாக!

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

---

**குறிப்பு :** இச்சுற்றுமடல் எல்லா ஆலயங்களிலும் வருகின்ற ஞாயிறு 26.04.2026 அன்று திருப்பலியின்போது வாசிக்கப்பட வேண்டும்.